1979 மார்ச் 26]

விருத்தாசலம் பெண்கள் உயர்நிலைப் பள்ளி கட்டிடம்.

*வினா எண் 529—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) விருத்தாசலத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி கட்ட சுடுகாட்டிற்கு அருகில் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது உண்மையா?

(ஆ) அதனை வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) ஆம்.

(ஆ) சுடுகாட்டை வேறு இடத்திற்கு மாற்ற முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

முதியோர் கல்வித் திட்டம்.

*வினா எண் 530—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) இந்த ஆண்டு (1978) அக்டோபர் மாதம் முதல் மத்திய அரசின் முதியோர் கல்வித் திட்டம் நமது மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறதா ?

(ஆ) ஆம் எனில் அதற்கு விசேஷ உதவி ஏதேனும் மத்திய அரசு அளித்துள்ளதா ?

(இ) அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) & (ஆ) ஆம்.

(இ) முதியோர் கல்வி மையங்களைத் துவக்கும் தொண்டு நிறுவனங்களுக்கு (Voluntary Agencies) மைய அரசு மான்யம் அளிக்கின்றது. அந்த அடிப்படையில் எந்த ஒரு தொண்டு நிறுவனம் இத்திட்டத்தினைச் செயல்படுத்த விழைகின்றதோ, அதற்கு திட்டச் செலவு அனைத்தினையும், நிர்வாகச் செலவில் 75 விழுக்காடுகளையும் மான்யமாகக் கொடுக்க மைய அரசு முன்வந்துள்ளது. இதுபோன்று 1978-79 ஆம் ஆண்டில் 16 தொண்டு நிறுவனங்களுக்கு மைய அரசு மான்யம் அளித்துள்ளது.